

கும்பகோணம் மாநகராட்சியில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாமை உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன், தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இம்முகாமில் முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாநகராட்சி மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையர் காந்திராஜ், வட்டாட்சியர் சண்முகம், சுகாதார குழுத் தலைவர் குட்டி தட்சிணாமூர்த்தி, பகுதிச் செயலாளர் கல்யாணசுந்தரம், மண்டலத் தலைவர் நரசிம்மன், பள்ளி தலைமையாசிரியர் லதா மற்றும் நிர்வாகிகள் மாநகர நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்போம்!

# திருவாரூர் மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*திருவாரூர், செப். 16 -*

தி.மு.க. முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டத்தின் சார்பில் பெருந்திரளாக பங்கேற்போம் என திருவாரூர் மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாளில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை, வார்டு கழகங்களில் பேரறிஞர் அண்ணா படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு, தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருவாரூர் மாவட்டத்திலுள்ள 1194 வாக்குச் சாவடிகளிலும், ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்களுடன் ஒன்றுகூடி, மண், மொழி காக்கும் உறுதிமொழியை எடுத்துக்கொள்வது.

செப்டம்பர் 17 ல் கரூர், கோடாங்கிப்பட்டியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டம் சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது.

வாக்குச்சாவடி முகவர்கள் அந்தந்த வாக்குச்சாவடிகளில் இறந்தவர்கள், இரட்டைப்பதிவு, பூத் மாற்றம், நிரந்தர இடமாற்றம், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட விபரங்களை முன்கூட்டியே அறிந்து, திருத்த முகாம்களில் பங்கேற்று போலி வாக்காளர்களை தடுத்து கழக வெற்றிக்கு பாடுபடுவது.

தமிழ்நாட்டின் மண் மொழி காக்க அனைவரையும் ஓரணியில் திரட்டி, கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியினை சிறப்பாக மேற்கொண்ட நிர்வாகிகளுக்கு நன்றிதெரிவித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் உ.மதிவாணன், தேர்தல் பொறுப்பாளர்கள் எஸ்.கே.வேதரத்தினம், ஜெகவீரபாண்டியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர்

# கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பெருமளவில் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

*புதுக்கோட்டை,செப்.16 -*

கரூரில் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் சுரங்கத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி அறிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது. பாவேந்தர் விருது. பேராசிரியர் விருது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்று கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழக. வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் அனைவரும் பங்கேற்று, பொதுமக்களும் அதிக அளவில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திருவாரூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மாநில விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் உ.மதிவாணன், தொகுதி பொறுப்பாளர் எஸ்.கே.வேதரத்தினம் ஒன்றியச் செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், ஐ.வி.குமரேசன், புலிவலம் ஏ.தேவா, பால.ஞானவேல், நகரச் செயலாளர்கள் வாரை எஸ்.பிரகாஷ் எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வம் மற்றும் வாக்குச் சாவடி நிலை முகவர்கள், கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தாராசுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஜெ.நடராஜன், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துச்செல்வம், ஜெ.சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் 15.09.2025 பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை, முன்னிட்டு திருச்சி சிந்தாமணி அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது அதனைத் தொடர்ந்து. தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என்ற தலைப்பில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களை ஒன்றிணைத்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநிலங்கள் அவை உறுப்பினர் கவிஞர் சல்மா, மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, பகுதிக் கழகச் செயலாளர் மோகன், மாநில, மாவட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர் .



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் தெற்கு, கிழக்கு மேற்கு நகரம் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் தலைமையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும், ஆதிதிராவிடர் நலக்குழு மாநிலத் துணைத் தலைவவருமான மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேரறிஞர் அண்ணாதுரையின் புகழை போற்றும் வகையில் சிறப்புரையாற்றி, ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, மாநகராட்சி மேயர் து. கலாநிதி, துணை மேயர் செ. பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தென்னாட்டு பெர்னாட்ஷா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டிற்கு பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கியவருமான பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து கழக தலைவர், முதல்வர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்கின்ற உறுதி மொழியை ஏற்றனர். இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன் , மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் , பரிதா நவாப், செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் , சித்ரா சந்திரசேகர், கோதண்டன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் , வேல்மணி முன்னாள் நகர செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர் தனசேகரன் மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன், இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



திருச்சியில் பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, எம்.எல்.ஏ. பழனியாண்டி மாநகராட்சி மேயர் அன்பழகன் முன்னிலையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்து உறுதிமொழி ஏற்றனர். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் முத்துச்செல்வம். விஜயா. ஜெயராஜ். கருணாநிதி. குடமுருட்டி சேகர். சேர்மன் துரைராஜ், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த், கண்ணன். தொ.மு.ச. குணசேகர் செவந்தி லிங்கம், ராம்குமார், மோகன்தாஸ், நாகராஜ், கனகராஜ், இளங்கோ, கலைச்செல்வி, கவிதா, உத்தமர் சீலி ராஜேந்திரன், வழக்கறிஞர் கவியரசன், அந்தோணி மணிவண்ணன் பாரதி ஜெயராம், குமார் தஸ்தா, கருத்து கதிரேசன் உட்பட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.